உ

கடவுள் துணை.

மனைவாங்கவும் - வீடுகட்டவும்,
குடித்தனம போகவும் உரிய
சிற்பசாஸ்திர மென்னும்,
நூதன

# மனைக்குறிசாஸ்திரம்.

இஃது,
செஞ்சி.
ஏகாம்பரமுதலியாரால்
சகலருக்கும் யெளிதில் உபயோகம்படும்
பொருட்டு முக்கியமாய் வேண்டிய
விஷயங்களை மாத்திரம் திரட்டி
மூலமும் - உரையுமாக
யெழுதப்பட்டது.

முதல் பதிப்பு

தக்கோலம்,
## இராமசாமி நாயுடு.
அவர்களால்தமது.

சென்னை சூளை
ஸ்ரீலட்சுமிநாராயணவிலாசஅச்சுயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

*Registered Copy Right.*

1894.

இதன் விலை அணா க.

RangaRakes tamilnavarasam.com

உ

கடவுள் துணை.

நூதன

# மனையடி சாஸ்திரம்.

கடவுள் வணக்கம்.

வேதநான்மறைகளாகி விளங்குமும்மூர்த்தியாகி
பூதலந்தனைப்படைத்த புண்ணியன்றனைப்போற்றி
தீதிலாமயனார்சொன்ன சிற்பசாஸ்திரமாம்நூலை
நீதியாய்தமிழினாலே நிலைபடஉரைக்கலுற்றேன்.

முகவுரை.

மண்டலத்துள்மானிடர்கள் பிழைக்கவென்று
மயனருளுஞ்சிற்ப நூலசாஸ்திரந்தன்னை
கண்டவர்கள்சூக்ஷமதாய் தெரிந்துகொள்ள
கண்ணாடிப்போல் திரட்டிச்சுருக்கமாக
பண்டாகமனைக்கோலும் பலன்களோடே
பகர்ந்திட்டேன்குடி புகரும்பலனுங்கூட்
எண்டிசையிலுள்ள வர்கள்மகிழச்செஞ்சி
ஏகாம்பரமிந் நூலை வெளியிட்டேனே,

## நூன்முகம்.

குடித்தனம்போகவும் அல்லது மனைக்கோலவும் ஆகாதமாதங்கள்.

விருத்தம்.

ஆடிதீங் கெழராவணன் பட்டதாம்
ஆலித்தே பெரும்பாடும் மார்கழி
வீழத்தே புரட்டாசி யிரணியன்
வேதத்தோன் முடியற்றதும் பங்குனி
நாடித்தேதியில் நன்மனைக் கேகிடில்
நாட்டில மைந்தர்கள்நாச மடைகுவார்
ஓடித்தேசங் கடியேரிப் போனாலும்
ஓட்டிலேயிரந் துண்ணவு மாகுமே,

இதன் பொருள்,

கைலயங்கிரியைக் கையாலெடுக்கத் தக்க வலி யுடையவனும் அ
ண்டமனாவிய யேழுமதில் சூழப்பட்டகோட்டையும் பொற்சிகரசி

RangaRakes tamilnavarasam.com

ம்மாதனமும் கிரீடாத்தியும் டாய்மையுமாகிய இராவணேஸ்வரன்
என்னும் ராஷ்சசவேந்தனானவன் தனது பொன்னும் பொருளும்
புரந்தாரும் தோற்றுவாழவும் வல்லமையும்தோற்று கண்ணீர்விட்டு
கதரியழுது மண்ணுக்கிரையாய் மாண்டு போனது (ஆடி) மாதமா
கையால்மனைவாங்கவும்வீடுகட்டவும் குடித்தனம்போகவும் ஆடிமா
தம் கூடாதாம். ௧

காடேகதியாக (௧௨) வருஷம் வனவாசம்செய்து அன்னியதேச
த்தில் ஒருவருஷம் அக்கியாதவாசமும்செய்து மீண்டோமென்று நி
னைத்தகாண்டீபன் முதலானபஞ்சபாண்டவர்க்கு மாளாத போர்மூ
ண்டது மார்கழிமாதமாகையால் மார்கழிமாதத்தில் மனைவாங்கினாலு
ம்வீடுகட்டத் துவக்கினாலும்அல்லது குடித்தனம்போனாலும்மென்
னோமும் சண்டையுஞ் சச்சருவுமாம். ௨

வேதாகமசாஸ்திரபுராணங்கள் முதலானதும் தன்னையேவிளங்கி
விக்குபபடியாயும் முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணா
பிரம்ரிஷிகள் மற்றயாவரும் தன்னையேதுதிக்கும்படியாய்க் கொவித
திருந்த இரணியாட்சதன் நாராயணன்கையால் ஜீரணமானது பு
ரட்டாசிமாதமாகையால் புரட்டாசிமாதத்தில் குடிததனம்போகக்கூ
டாதென்று மயனென்னும் தெய்வ சிற்பியால் செய்யப் பட்டிருக்
கிறது ௩

திருமூர்த்திகளில் ஒருவனாகிய கிருஷ்டிகர்த்தாவென்னும் பிரம்ம
தேவனது சிரசுஐந்தில் ஒன்னுபறிகொடுத்து பங்கமடைந்து பங்கு
னிமாதமாகையால் மனைகோலவும் குடிபோகவும் கூடாதாம், ௪

## ௧௨-மாதத்திற்கும்பலன்.

செப்புஞ்சித்திரை சிரந்தமதிதனில்
ஒப்புமாளிகை யொவ்வவமத்திடில்
தப்பிலாமற்றனமாற்காளியாம்
மெய்ப்புடன் மயன் விரும்பியுரைத்ததே,

(இ-ள்) சித்திரைமாதத்தில் விடுகட்டினும் குடிபோயினும்தனத்
திற்குகட்டமாம் காளிஅல்லது துர்க்கைக்குப் பூசை போடவேண்
டியகாரணம் சம்பவிக்கும்-எ-று. ௫

பேசும்வைகாசிப் பெருக்கமாளிகட்டில்
தேசம்புருஷ ஜெயப்பிரஸ்தாபமாம்
நேசமாய்ப்பெண்டிர் நெருங்குஞ்சுபாசுபம்
மாசிலாமயன் மனனர்க்குரைத்ததே,

(இ-ள்) வைகாசிமாதத்தில் மனைகட்டினால் திக்குவிஜயம் போன்
றமனசந்தோஷமும் திருமணசுபங்களும் கூடுமாம்-எ-று. ௬

RangaRakes tamilnavarasam.com

உள்ளாசியுனைக் குறேன்மாந்தர்க்கு
வெள்ளும்ஆனியில் திடமாளிகட்டிடில்
பிள்ளைகுட்டி புகல்மிருத்துபயம்
சொன்னமயனுங் கூறியதுண்மையே,

(இ-ள்) ஆனிமாதம்வீடுகட்டத்துவக்கில் மிருத்து பயமும் அவதூருக்கிடமுமாம் இதுகளுக்கு பரிகாரங்கள் இரண்டாம் பாகத்தில் காட்டப்படும்-எ-று. ௭

சொல்லுமாடியில் துடர்ந்துமாளிகட்டில்
சொல்லுங்காராம் பசுக்கள்நஷ்டமாம்
சொல்லுஞ்செல்வமும் சீருமழிந்திடும்
சொல்லும்மயனூர் தொடுத்தநூலுண்மையே,

(இ-ள்) ஆடிமாதத்தில் வீடுகட்டினாலும் குடித்தனம் போனாலும் மாடுமக்கள் பொன்பொருள் நஷ்டமாம் அகாலமரணமும் சம்பவிக்கும்-எ-று. ௮

உரைத்திடுமாவணி மாளிகைகட்டிடில்
நிரைத்திடும்பந்து வர்க்கம்வரவுமாம்
உரைத்திடுமயன் வாக்குபொய்யாதுகாண்
பரைத்திடும்பஞ்சணந் தார்க்கரைந்ததே,

(இ-ள்) ஆவணிமாதம்வீடுகட்டினும் குடிபுகினும்பந்துவர்க்கம்வரவுசுபங்கள் சவுக்கியங்களும் கைகூடுமாம்-எ-று. ௯

தோயுமேபுரட்டாசி மாதந்தன்னில்
ஏயுமாளிஎழில்பெறக்கட்டினல்
மாயுநோயு மகாரோகமெய்திடும்
தாயுமேமயன்றயவா யுரைத்ததே,

(இ-ள்) புரட்டாசிமாதத்தில் குடித்தனம்போனாலும் மனைகோலினாலும வீடுகட்டினாலும்தீராதநோயுங்கிலேசமும் வருத்தமும்உண்டாகும்-எ-று ௧0

காணுமற்பிசி கனத்தமாளிகட்டில்
ஆணும்பெண்ணு மறியகலகமாம்
பூணுமாடை புகலுமரணமாம்
வேணுசேதம் விளையுமென்மேலுமே,

(இ-ள்) அற்பிசிமாதம் குடித்தனம்போனாலும் வீடு கட்டினாலும் புருடனுக்கும் பெண்சாதிக்கும்தினங்கலகமாகும் மென்னேரம்மனஸ்தாபப்பட வேண்டி வரும்-எ-று. ௧௧

கனத்தமாரிகாட்டுங் கார்த்திகையில்
தனத்தமாளிகை தாங்கட்டிவாழ்ந்திடில்

RangaRakes tamilnavarasam.com

அனர்த்தம்வருமொரு நாளும்மாக்கர்க்கு
தினத்தலட்சுமி நெருங்கும்வாசமே,

(இ-ள்) கார்த்திகை மாதத்தில் குடிபோனாலும்மனைகோலினாலும் வீடுகட்டினாலும் லட்சுமிகடாட்சம் திரவியசம்பத்து புத்திரபாக்கிய முண்டாகும்-எ-று. ௧௨

சொல்லுமோர் திருவாதிரைமார்கழி
புல்லுமாளி புகழுமேவகட்டிடில்
கொல்லுமேபயங் குவலயந்தன்னில்
ஒல்லுமயனார்விரும்பியுரைத்ததே,

(இ-ள்) மார்கழிமாதம் குடித்தனம்போனாலும்மனைகோலினாலும் வீடுகட்டினாலும் சண்டை போர்போட்டு கச்சேரிதிரிய வேண்டி வரும்எ-று, ௧௩

இரணம்வீசுங் கிளாக்குந்தைமாதத்தில்
பூரணமாகமுழுமாளி கட்டிடில்
மரணமன்னியும் மக்கினிபயமுண்டாம்
சரணம்பண்ணித் தடுப்பதுநன்மையே,

(இ-ள்) தைமாதத்தில் மனைகோலினாலும் வீடுகட்டினாலும் அக்கினி பால்பதகிப்பெரியுமே சரணம்செய்தாவது தடுத்துவிடுவது மகாதருமமாம் குடக்கூலிக்கும போகக்கூடாது-எ-று. ௧௪

அருமையாகவறைகுறேன் சிற்பநூல்
பெருமையாம்பிடக்கமாளிகட்டில்
சிறுமைநீங்கியே செலவஞ்செழிக்குமாம்.
ஒருமையாகஉமக்கீசன் சொன்னதே,

(இ-ள்) மாசிமாதத்தில் வீடுகட்டினாலும் மனைவரங்கினாலும் குடித்தனம்போனாலும் சிறுமையாகிய துன்பங்கள் நீங்கிமிக்கசயுக்கியமும்செல்வமுமமென்மேலும் பெருகுமாம்-எ-று ௧௫

மெள்ளவேபங்குனிமாளிகட்டில
உள்ளப்பொருளும் உடமைபணிகளும்
தென்னுமாடை சிறந்ததோர்செல்வமும்
கொள்ளைபோமெனக் கூறுவார்சிற்பரே,

(இ-ள்) பங்குனிமாசம் வீடுகட்டினாலும்மனைகோலினாலும்குடித்தனம்போனாலும் பொன்பொருள் உடையாபரணம் கொள்ளைபோவதன்றி உள்வீட்டு பகையுமாம்-எ-று. ௧௬

☞ குடித்தனம் போகும்போது
வெள்ளிஅல்லது சுக்கிறன் அறிய.

சுக்கிரனெதிரேயாகில் செல்குடிசாவுமுண்டாஞ்

RangaRakes tamilnavarasam.com

சுக்கிர வலக்கண்ணாகில் தோற்றியபொருளேசேதம்
சுக்கிரன்பின்னேயாகில் சுகமுடன்வாழலாகும்
சுக்கிரனிடக்கண்ணாகிற்றுக்கமொன்றில்லையெண்ணே,

(இ-ள்) வெள்ளியெதிரிலிருந்தாலும் வலதுபக்கமாயிருந்தாலும் மூடத்திலிருந்தாலும் குடித்தனம்போகக்கூடாது வெள்ளிபின்புறத்திலிருக்கும் போது இடதுபக்கத்திலிருக்கும்போதும குடித்தனம் போனால திரவியசம்பத்தும் மனசந்தோஷமும் புத்திர பாக்கியமும் உண்டுமிகவும் உத்தமம்-எ-று. கஎ

## குடித்தனம்போக
## இனப்பொருத்தம்,

பிறந்தநாளிரண்டுநான்கும் ஒன்பதுயெட்டுமாறும்
சிறந்தசீர்பெருகுமற்றோர்கோடில்லை சம்பத்துண்டாம்
அறிந்தநூற்படியேஒன்று மூன்றுமேழ்மாகில்மாதே
வருந்துயர்மெத்தவுண்டாம வண்மையோர்குடிபோகாரே,

(இ-ள்) குடித்தனம்போகும்போது அந்தகுடிக்கு தலைவன்யெவனோ அவன்பிறந்தஜென்மநாளும் மூன்றுநாளும் ஆறாவதுநாளும்யேழாவதுநாளும் கூடாது - உ-ச-அ-சு - இந்நாள்களில் குடித்தனம் போனால சகலசம்பத்துடன் வாழ்வான்-எ-று. கஅ

## குடித்தனம் போக
## நட்சத்திரங்கள்,

காலற்றன உடலற்றன தலையற்றனநாளில்
மானுக்கொருமாளிகை கோவினுமதுபாழாம்
மேலக்கருங்குழலாரிதில் ருதுவாகினுமடலாம்
ஞாலததவற்வழிபோயினு நலமுற்றிடாறவரே,

(இ-ள்) காாத்திகை-உத்திரம்-உத்திராடம் இந்த-மூன்றுநட்சத்திரங்களும் காலற்றநாள்களாம் மிருகசீரிடம் அவிட்டம் சித்திரைஇந்த மூன்றும் உடலற்றநாள்களாம் புனர்-பூசம்-விசாகம்-பூரிட்டாதிஇந்த மூன்றும்தலையற்றநாள்களாம் இந்தஒன்பதுநாள்களிலும்குடித்தனம் போனாலும் பாழாம் பெண்கள்ருதுவானாலும் மலடாவார்கள் யாத்திரைபோனாலும் துன்பப் படுவார்களாம்-எ-று. கக

RangaRakes tamilnavarasam.com

## குடித்தனம் போகவும்-மற்ற சுபகாரியத்திற்கும், ஆகாதகரிநாள்கள்,

சித்திரைமீ ௬-௧௫
வைகாசிமீ ௭-௧௬-௧௭
ஆனிமீ-௧௬-
ஆடிமீ-௨-௧௦-௨௦
ஆவணிமீ-௨-௯-௨௮
புரட்டாசிமீ-௧௬, ௨-௯
ஐப்பசிமீ-௬,௨
கார்த்திகைமுதற்சோமவாரம்-௧-௧௦-௧௭
மார்கழிமீ-௬-௯-௧௧
தைமீ ௧-௨-௩-௧௧-௧௭
மாசிமீ ௧௫-௬-௧௭
பங்குனிமீ-௬-௧௫-௨௬

## பூமிவாங்கும்போதாகிலும் அல்லது வீடுகட்டும் போதாகிலும் பூமிசோதிக்கும் நியமம்.

கூறும்பூமி குறிக்கும் வெளிப்புடன்
வீறுந்தித்திப்பு விரும்புருசியுடன்
மேருந்தாமரை பொருந்தபூவாசனை
ஏரும்பூமி யிருக்கமிகநன்றே,

(இ-ள்) பூமியானது பார்வைக்கு வெளுப்பாயும் உணவில்தித்திப்பாயும் மெற்றச்சிகப்பாகியும் தாமரைப்பூ வாசனையுள்ள பூமியாகியும் யிருக்க அந்த நிலத்தில்வீடுகட்ட மிகநன்று-எ-று. ௧௬

## பிராமணன் வீடுகட்டும்பூமியின் நியமம்.

நன்றுமாரியர் நவிலமாளிகட்டில்
குன்றுதெண்ணுளுங் கூறக்குடும்பமும்
நன்றுயோங்கும் நலந்தருமகற்சுகம்
வன்றுமறையாள் வகுக்கும்வாசமதே,

(இ-ள்) ஆரியானென்னும் பிராமணன் வீடுகட்டவேண்டுமாகில்தாமரைமலர்போன்ற வாசனையுள்ளமனையில்வீடுகட்டுவாராகில்யெண்ணுளும் கும்பம்குன்றாமல் சுகத்தோடு வாழ்வார்கள்-எ-று. ௨௦

RangaRakes tamilnavarasam.com

## அரசர்கள்மாளிகைகட்டும் பூமியின் நியமம்.

ஓதும்பூமி யுயர்ந்தசிவப்புமாய்
காதவுந்துவர் கருதியபூமியும்
ஏதலாம்பறி எழில்மணல்போலவும்
பூதளத்தில்புகழ் மாளிகட்டவே,

(இ-இ) அரசர்க்க ளென்னும் ராஜாக்கள் வீடாவது மண்டபமாவது மாளியாவதுகட்டும் பூமியெவ்விதமிருக்க வேணுமென்றால் அதிகசிகப்பாயும் உணர்வில் துவர்ப்பாயும் பரிமளத்தில் குதிரையைப்போலும்யுள்ளபூமியில் அரசர்கள்வீடுகட்டினால் மிகவும்வுத்தமம்-எ-று.

## சூத்திராள்வீடுகட்டும் பூமியின் நியமம்.

கருததும்மென்றக் கசம்புங்கருமுமாய்
பெருத்ததாவியம் பிரபலவாசமாய்
திருத்தமாக நிலமதுகண்டிடில்
வருத்தமில்லையே சூத்திரர்கட்டவே.

(இ-ள்) சூத்திரர் வீடுகட்டும்படியான நிலம் எவ்வித மிருக்கவேணுமென்றால் கருத்ததுங்காரமுப்பும்கசம்பும் தானியவாசமுள்ளதுமாயிருக்க பார்த்து வீடுகட்டுஞ் சூத்திராளுக்கு உத்தமம்-எ-று.

## ஜங்கமர்வீடுகட்டும் பூமியின் நியமம்.

பச்சைநிலமொடு பகர்புளிஉப்புமாய்
இச்சையாக விருந்திடும்பூமியில்
அச்சமில்லாமலே அகமதுகட்டிடில
லச்சையில்லையே ஜங்கமாஜாதிக்கும்.

(இ-ள்) சங்கமஜாதி வீடுகட்டும்படியான நிலமெவ்விதமிருக்கவேணுமென்றால் பச்சைநிறமாயும் உணர்வில் உப்புபுளிப்புமாயுமிருக்கஅப்போப்பட்ட நிலத்தில் ஜங்கமர் வீடுகட்டவும் உத்தமம்-எ-று.

RangaRakes tamilnavarasam.com

### சகலஜாதிகளுக்கும்வீடுகட்டும் போதுபூமியின் நியமம்,

உக

நீங்காத துறப பரிமளபூமியில்
வோங்குஞ்சகலரும் வீடுகள்கட்டிட
பாங்காநாளும் பலமதுதருகுமே
ஏங்குமபுகழ்பெறும் யெழில்சிப்பநூலின்வார்

(க-ள்) சகலஜாதிகளும் கட்டும்போது நிலமெவ்வித மிருக்கவே ணுமென்றால் நீங்காத மதுரமும் பரிமளமும் உள்ளபூமி மகா உத்த
உச
மம்-எ-று.

### மனைகோலுகையில் லக்கண முகூர்த்தம்,

தக்கஜென்மநாலுபத்தில் சசிதானிர்க்கத்
தருபதினொன்றிற் குருவுசெஜனுமந்தன்
மிக்கயிவாதானிருந்து முகூர்த்தஞ்செய்ய
மேவியதோர் மனைதனக்குவயதுநூறாம்
தக்கதொருலக்கணத்திற் குருவுஞ்சுக்கிரன்
றருமந்தில்மூன்றில்வெய் யோன்தகமையாகில்
திக்குயருங்குஜனிருந்தால் குத்துக்கேதான்
யறியவயது நூறெனவே செப்பினாரே,

(இ-ள்) ஜென்ம லக்கணத்திற்கு நாலுபக்கத்தில் சந்திரன் நிர்க்க கூ-ன்றில்குருவுசெவ்வாய் சனி யிவர்கள் இருக்கமுகூர்த்தம்செய் தால்அந்தமனைக்குவயது-ா-யிந்த நூறுவருஷமும்விர்த்தியாய் வோ ங்குமலக்கிணத்தில் குருவும்சுக்கிரனுமிருக்க மூன்றில் சூரியனிருக்க கூ-செவ்வாயிருக்கமுகூர்த்தஞ்செய்தால் அந்தமனை-ா-வருஷம்விர்த்
உரு
தியாய் விளங்கும்-எ-று.

மேவியசீர்லக்கணத்திற் சோமனுலில்
விரும்புபுதன் குருவஸ்தமானகாலக்
தாவியபட்டணைத காமுகூர்த்தஞ்செய்தால்
நகைதன்வயதிரு முந்நூறாகும்
மேவியமேதாஉருக்கயத்தில் பத்தில்வெள்ளி
மொருமூன்றிற் புதன்குருவுமத்தமான
மாவநபட்டணைகள் முகூர்த்தஞ்செய்யில்
வாருநூறுமிருமூன்றாய் வருததவமே,

(இ-ள்) மனைகொள்பவர்களின்லக்கணத்திற் சந்திரன் நிக்க-சூ தனிருக்க குருவு அஸ்தமாக முகூர்த்தஞ்செய்யில் அந்த மனைக்கு

RangaRakes tamilnavarasan.com

கா-வயதாகும் லக்கினத்திற்கு 10-சுக்கிரனிருக்க-கூ-புதனிருக்க குருவு அஸ்தமானமாக முகூர்த்தஞ்செய்யில் அந்தமனைக்கு அறு நூறுவயது விளங்கும்-எ-று, உ௬

பொன்குருக்ஷேத்திரத்தில் வெள்ளிவீட்டில்
புதனிருக்கநகர் முகூர்த்தம்புரிவீராகில்
தன்நுவயதிருநான்கு நூறதாகும்
தருமிரவியுதயமத்தமானகாலஞ்
சன்மைதரும் த்திலே சோமமிற்கத்
தசமைமதிராலயமே முகூர்த்தஞ்செய்யில்
இங்கிதமாவயதுமொரு சகஸ்திரமென்று
இம்மொழிக்குமையனையுபியம்பினரே,

(இ-ள்) குருக்ஷேத்திரத்திலிருக்க வெள்ளிவீட்டில் புதனிருக்கமுகூர்த்தஞ்செய்யில்-அ௱-வயதிருக்கும் சூரியன் அஸ்தமான காலமத்தியிலசந்திரன் மிற்கனுலேயமுகூர்த்தஞ்செய்யில் அ௲ வருஷம் விளங்கும்-எ-று- உஎ

தேசயர்த்தசுக்கிரனுதயமாக
திருந்தியதோரேழதிலே குருவிருக்க
மாசகன்றபத்திலே சோமமிர்க்க
வளர்முகூர்த்தமாலயமே மகிழ்ந்துசெய்யில்
பேசிபெருவயதுமொருசகஸ்திரமென்றே
பேசலாம்மோனைதனில் வெள்ளிநிற்க
வாசகுருக்ஷேத்திரமாகநக்கேதான்
மருவுநர்ச்சேதமில்லை மகிழ்வாரே.

(இ-ள்) சுக்கிரனுதயமாக -எ- இராஜனிருக்க-10- சந்திரனிருக்க முகூர்த்தஞ்செய்யில் அந்தமனை ஆயிரம்வருஷம் விளங்கும்இலக்கினத்தில் சுக்கிரனிருக்க குருக்ஷேத்திரத்திலிருக்க முகூர்த்தஞ் செய்யில் அக்கினிபயமில்லை-எ-று உஅ

வருக்கடகமகரமது மீனந்தன்னில்
வளமைமிகுசந்திரனுமரிவிதிற்கில்
திருவுபார்க்கிரகமது வைக்கோல்போட
ஜெயமதுவாம் பூராடதிருவோணந்தான்

RangaRakes tamilnavarasam.com

னருவுயர்ந்தரோகணியுந் திரங்கண்மூன்றும்
தங்கியவாயில்லியமது சார்ந்தக்கேளு
வருமிருகசீரடத்தில் குருவிருக்க
வருகுருவாரங்கள் செயமகிக்ஷியாமே.

(இ-ள்.) கடகம் மகரம் மீனம் இவைகளிற்சந்திரனிருக்க வக்கோல்போட்டால் சுகமாகும் பூராடம் திருவோணம்உரோகணிஉத்திராடம் உத்திரட்டாதி ஆயில்லியம்மிருகசீரடம்இவைகளில்இராஜ சனியிருக்க குருவாரத்தில செய்ய மகிக்ஷியுண்டாம்-எ-று. உக

திருந்துசலராசிதனில் வெள்ளியிருக்க
சிரந்தசுக்கரவாரமுமா யிருந்தாலக்கம்
பொருந்துசலராசிதனில் சோமனிற்க
புகலுதிங்கள் வாரமதாயிருக்குமாகில்
வருந்துமமகமனையாளுங் கர்ப்பமாகில்
வளர்முகூர்தங்குடிபுகவு மத்திபந்தான்
வரிந்தியதோர் கிரகபலந்துதானென்று
மயனுரைக்கும் வாரதனையகிழ்ந்துபாரே,

(இ-ள்) சலராசியில் சுக்கிரனிருக்க சுக்கரவாரமாயிருந்தால் செல்வமுண்டு சலராசியில் சந்திரனிருக்க திங்கட்கிழமையாகினும் மனையாள் கெர்ப்பமாயினும் முகூர்த்தஞ்செய்யினும் குடிபுகினும் மத்திபமென்று மயனென்பவர் சொல்லியவாக்கியம்-எ-று. கூ0

பிறந்தநாள் வாரமுங்கூடிய
ஆகாநாள் அறியும்பலன்.

செங்கதிரோன்வாரநாளிற்பரணிகூடிற்
செழுமதியிற்சித்திரை செயுத்திராடம்
பொங்குபுதனவிட்டம் பொன்வாரக்கேட்டை
புகர்பூராடங்காரி ரேவதியினுளின்
மங்கையரை மணம்புரிதல்விதவையாகும்
மனையெடுக்கிற்பாழ்வழி போகிற்சாவாம்
செங்கையிர்க்கண்டார் பூத்தான்மலடியாவாள்
சிருகுழவிபெரின் மரிக்கின் திண்ணந்தானே.

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) ஞாயர்பரணி திங்கள் சித்திரை செவ்வாய் உத்திராடம் புதன் அவிட்டம் வியாழம்-கேட்டை வெள்ளி-பூராடம் சனி ரேவதி புங்கூடினால் ஆகாது இந்நாள்களில் விவாகஞ்செய்யில் கைப்பெண்ணும் மனைகோவில் பாழாம் வழிபோகில் மரணமாம் ருதுவானால் ௬௧
மலடியாம் பிள்ளைபிறக்கில் சாவாம்-எ-று.

வாஸ்துபுருஷன் கிடக்கை
அறியவும்.

திங்களின்றாசிக்குந் திசைகளில்காலைநீட்டி
இங்கெதிர்தலையைவைத்தே யிடக்கைகீழதாகப்
பொங்கியவலக்கைமேலாய் புகவும்விளங்கலென்று
மங்கையேசொல்லக்கேளாய் வாஸ்த்துவின்கிடக்கைதானே

(இ-ள்) வாஸ்த்துபுருஷன் அந்தந்தமாதத்து ராசியில் காலைநீட்டி அதற்கெதிராகிய வேழாம்ராசியில் தலையைவைத்து இடக்கை ௬௨
கீழ்வலக்கை மேலுமாககிடப்பன்-எ-று.

வாஸ்துவின் குறியில்
வாசல்வைக்கும் விபரம்.

காலதேவாசலாகில் கணங்குழல்சாவைச்சொல்லும்
சாலவே தலைபக்கில் றானவன்சாவுசொல்லுங்
கோவியமுதுகேயாகில் கோவிநாலச்சமுண்டாம்
வாவியவயற்றிவிட்டால் வான்பொருள்சேருமன்றே.

(இ-ள்) வாஸ்த்துபுருஷன் கிடக்கையில் காலில் வாசல்விட்டால் மனையாளுக்குப் பொல்லாங்கு தலையில் வாசல்விட்டால் கணவனுக்காகாது முதுகில் வாசல்விட்டால் இராஜபயமுண்டாம் வயிற்றில் வாசலவிட்டால் வாழ்வுஉண்டாம்-எ-று.

வாஸ்துவெழுந்திருக்கும் நாள்அறிய
மனைகோலகுடிபுக.

ஏற்றுஞ்சித்திரைவோர் பத்திவிருபத்தியொன்றிலவைகாசி
பார்த்தவற்ப்பிசியோடடி பதினோன்றாவணியோரில்

RangaRakes tamilnavarasam.com

கார்த்திகையெட்டுதையாரில் மாசியிருபத்தினில்
வாஸ்துவுந்தானெழுந்திருப்பான் மனைதான் வாசல்கொள்ளலாம்.

(இ-ள்) சித்திரைமீ ௧௨ வைகாசிமீ ௨௧ ஆடி அர்பசிமீ ௧௧ ஆவணிமீ ௬ கார்த்திகைமீ ௮ தை மாசிமீ ௨௰ இந்ததேதிகளில் வாஸ்து புருஷன் யெழுந்திருப்பான் யின்னாளில் மனைகோலில் அவரவருக்குப் பொருந்தியதிக்கில் வாசலவிடலாம் குடிபுகலாம் பாதாருதலையுமில்லை-எ-று, ௧௩

வாஸ்த்து புருஷன் யெழுந்திருக்கும் ஜாமந் தேதிநாழிகை போசட்டம் அறியவும்.

குண்டமாங் குண்டாங்கவெட்டாங் கொடியகேள்பத்தாகும்
கண்டுகோலிறண்டதாகும் நன்மேடமெட்டதாகும்
திண்டிறன்சிங்கந்தானே சிரங்கமூவேழதாகும்
கண்டிறன்மறையோர்சொன்னாற் வாஸ்த்துவுமுதிக்கும்வாறே

(இ-ள்) சித்திரைமீ ௧௨௳ நாழிகை ௫ வைகாசிமீ ௨௧௳ நாழிகை ௮ ஆடி அற்பசிமீ ௧௧ தேதி நாழிகை ௨ ஆவணிமீ ௬௳ நாழிகை ௨௧ கார்த்திகைமீ ௮ தேதி நாழிகை ௰ தைமீ ௧௨ தேதி நாழிகை ௮ மாசிமாசம் ௨௰ தேதி நாழிகை ௮ இந்த நாழிகைக்கு மேல் வாஸ்த்துபுருஷன் யெழுந்திருந்து மூனேமுக்கால் நாழிகையிருப்பான் அதுமுதல் முக்கால நாழிகைஸ்த்தானம் ௨-வது முக்கால நாழிகை பூசை ௩-வது முக்கால்நாழிகை போஜனம் ௪-வது முக்கால நாழிகை தாம்பூலம் ௫-வது முக்காலநாழிகை இராஜஜியபாரம் இந்தபடிசென்றபின் படுத்துக்கொள்வான்-எ-று. ௧௫

வாஸ்த்துவின் கிடைக்கையறியாமல மனைகோலின் வருந்தெடுதி.

கூர்த்தகாண்முகூர்த்தந்தன்னைக் குறையறப்பார்த்துகொண்டு
வாஸ்துவின் கிடையறிந்து மனைதனைகோலாகில
சீர்த்ததன்பொருளுங்கேட்டாய்ச் செய்தவயனத்தும்பாழாம்
மூர்த்தமாய்நாசஞ்செய்து முனிவையுந்தொடருமன்றே

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) நல்முகூர்த்தமும் வாஸ்துவின் இடைக்கையுமறிந்து மனைகோலாதுவில் பொருளுஞ்சேதமாய் செய்தவையும் பழுதாய் மனைகோலின சிறப்பையும் நோய்தொடரும்-எ-று, ௧௬

### நல்லநாளும் முகூர்த்தமுங்கொண்டு மனைநடுவில் கெல்லிபார்க்கும் லக்கினம்.

நல்லகோர்நாளும்பக்க முகூர்த்தமும்பொருந்தங்கொண்டு
கெல்லியேபார்க்கும்போது கரிவெழுநோயதாகும்
புல்லிடவுமியேகாணிற் பொருண்மிகக்கேடுசொல்லும்
வில்லியவிறகுகாணி லிவன்குலங்கேடதாமே

(இ-ள்) நல்லநாளும் மகூர்த்தமும்பொருந்த முகூர்த்தமுங்கொண்டு மனையில் கெல்லிபார்க்கும்போது கரிவெழுந்தில் நோயாகும் உமிசாணியிருக்கில் பொருள்கேடுவரும விறகுகாணில் மனைக்குரியவன் குலம் நசிந்துபோம்-எ-று, ௧௭

(இதுவுமது)

இண்டினவெறும்பு தேளுஞ்சிதலெலாங்கட்டைபொல்லா
வண்டமுழுங்கிரிமேகசம வந்திடலமுனாறும்பொல்லா
வெண்டலையெலும்புகாணில் வெறுமையுங்கேடுமென்று
தண்டமிழ்நூல்வல்லோர் சாற்றினார்தன்மையாலே.

(இ-ள்) எறும்பு தேள்கறையான் கட்டைமுட்டைநகம் மயிர் வண்டலைஎலும்பு இவைகளில் யாதாம் ஒன்று காணில் பொல்லாங்குகேடும் ஆகாவாம்-எ-று. ௧௮

### மேற்கொள்சுபலக்ஷணமறிதல்

மண்டுகெம்மறணைபல்லி வன்புகுசிலந்திவட்ட
கண்டதுதோன்றுமாகில் நன்மனைக்கழகதாகும்
கொண்டதிலுடும்பு பாம்பு குருதேளாமைபூரம்
வண்டிவைவொன்றுமாகி லனல்பட்டழிந்துபோமே

(இ-ள்) தவளை அரணைபல்லி கண்டு இவைதொன்றில் உத்தமம் உடும்பு பாம்பு தேனகூண்டு தேள் ஆமைபூரம் இவைகள் தொன்றில அந்தமனை அக்கினியால் அழிந்துபோகும்-எ-று. ௧௯

RangaRakes tamilnavarasam.com

இதுவுமது.

மீண்டியதனத்தை காணிலின்பமேவருவதாகும்
கண்டருகனங்கள்சேருங்கல்லுநகலனை காணில்
பண்டியன்பசுவின்கொம்பு பலதானியங்கள்செங்கல
வேண்டியலோகங்காணில் மிகுத்திடும்செல்வந்தானே

(இ-ள்) தனப்புதையல்காணில் யின்பமுண்டாம கவளை காணில் உடைமையுண்டாம் பசுவின்கொம்பு பலதானியம் செங்கல் பஞ்சலோகம் இவையில் யாதாம் ஒன்று காணில் மிக்க செல்வமுண்டாம்-எ-று. கூ0

இதுவுமது,

பொன்னுடன்வெள்ளிசெம்பு பொரிந்திடநன்மையாகும்
மின்னுமோயிரும்போடியம் பித்தளைமத்தியந்தான்
கன்னலைசேர்மொழியினாளே கருங்கல்லோடெலும்புகாணில
மன்னியமனையாள்சாவாள் மாலுவன்கணவன்தானே.

(இ-ள்) பொன்வெள்ளி செம்பு இவைகளிலொன்றுகாணில் உத்தமம இரும்புசயம் பித்தளை இவைகளிலொன்றுகாணில் மத்தியம் கருங்கல எலும்பு இவைகாணில் அம்மனைகுரியவன் இறப்பதுமன்றி அவனும் வியாதியால் மெலிந்திருப்பான்-எ-று. ()

மேற்படி மனையில் குழிதோண்டி யெடுத்த
மண்ணையடித்து பலன்காணுதல்.

அளந்ததோர்குழியின் மண்ணையங்கதமேலேயிட்டால
வளர்ந்திடலசெல்வமுண்டா மோந்திடின்மிகுதியில்லை
குளக்கணிற்குறையுமாகிற் குறைந்திலம் சம்பத்தென்றே
யுளந்தனிற்கருதிசல்லொருதைத்தனர் பூவிபின்மாதே.

(இ-ள்) முன்செல்லிகுழியிலெடுத்த மண்ணைமருபடியும் அந்தகுழியில தானேகொட்டினால் மண் மிஞ்சியிருக்குமாகில் லாபமுண்டாம் ஒத்துசரியாயிருக்கில் வரவுமுதலும் சமமாம் குறைந்திடில் செல்வங்குறையும் செலவு அதிகமாகும் ஆகவாம்-எ-று. கூஉ

வீடுகட்டுதற்கு உதவாமரங்கள்,

அத்தியும்மானுமிச்சி யாசுடநிலவுதாணும்
நத்தியபுரசுருச்சம் நவின்றிடுமிலந்தைபீலி
சித்தகமகிழும் வினாவுடனிவைகளெல்லாம்
சித்தியாகங்கள்கட்டச் செல்வமுங்குன்றுந்தானே

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) அத்திமரம் ஆலமரம் இச்சிமரம் அரசமரம் குச்சமரம் இறக்கைமரம் பிலிமரம் மகிழமரம் விளாமரம் இவைகளால வீடு கட்டினால் இருக்கப்பட்ட செல்வமுங்குறைந்து புத்திரபாக்கியமும் அற்றுவறுமைமேலிட்டு அதிக துன்பத்தையுண்டாக்கும்-எ-று.

சிரியேகாற்றில் வீழ்ந்த திரைமைசேர்மரமுமல்லா
கூரியவாலயத்திற் குணம்பெறசிற்குலல
தெரியமாமயாணத்திருந் திடுமாமரந்தான்
மாரியேகட்டுமாகில் வம்மிசநாசமாமே.

(இ-ள்) ஆற்றில் அடிப்பட்டுவிழுந்தமரம் ஆலயத்தில் யிருக்குமரம் மாயாணத்திலயிருக்குமரம் இவ்வகைபட்ட மரங்களால் வீடுகட்டச்செய்தால் செல்வங்குறைந்து ஆயிசு ஜீரிணித்துவமிசநாசமாகும்-எ-று.

## குடியிருக்குமனையில், ஆகாமரங்கள்

### வெண்பா.

பரித்தியகத்தி பனைநாவல்நெல்லி
யெருக்கும்புளியிலவோடெட்டும்-பெருக்கமுடன்
யெந்தமனையாயினு மிந்திரபதமானாலும்
அந்தமனை பாழாய்விடும்.

(இ-ள்) பரித்தி யகத்தி பனை நாவல்நெல்லி எருக்குபுளியிலவு இவ்வகைப்பட்டமரங்கள் வீட்டில் யிருக்குமாகில்தாமரைகலத்தில் வீற்றிருக்கின்ற இலட்சுமியானவள் இவ்விடத்தில் யிருக்கமனதில்லாமல் வெருத்துமனையைவிட்டுநீங்குவாள் அம்மனைபாழாகும்-எ-று.

## வீட்டுக்கு அறைகள்கூடங்கள் வாசல்வைத்து கட்டுவதற்கு அடிஅளவு அகலங்களும்அறியும்விபரம்.

| | | |
|---|---|---|
| சு | அடி | நன்மையுண்டு |
| எ | அடி | தரித்திரம் |
| அ | அடி | இராஜஜியம் |
| கூ | அடி | பீடை |
| ம | அடி | பாலுஞ்சோறும் |
| கக | அடி | நன்மை |

RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| கஉ | அடி | புத்திர ஆனி |
| கந | அடி | வியாதியுண்டு |
| கச | அடி | சஞ்சலமுண்டு |
| கரு | அடி | உடனே துன்பம் |
| கசா | அடி | மிகுந்தசெல்வமுண்டு |
| கஎ | அடி | எதிரி அஞ்சியிருப்பான் |
| கஅ | அடி | அமர்ந்தமனை பாழாம் |
| ககூ | அடி | தரித்திர புத்திரவியாகூலம் |
| உ0 | அடி | இன்பந்தரும |
| உக | அடி | நன்மைதரும் |
| உஉ | அடி | யெதிரியஞ்சுவான் |
| உந | அடி | தீது உண்டாம் |
| உச | அடி | மத்திபம் |
| உரு | அடி | மனையாள்மரணம் |
| உசா | அடி | சம்பத்துண்டாம் |
| உஎ | அடி | மிகுந்தசெல்வமுண்டு |
| உஅ | அடி | தெய்வகடாக்ஷமுண்டு |
| உகூ | அடி | பால்பாக்கியசெல்வமுண்டு |
| ந0 | அடி | லக்ஷ்மிகடாக்ஷம் |
| நக | அடி | துன்பமில்லை நன்மையுண்டு |
| நஉ | அடி | முன்பிழந்தபொருள்வரும் |
| நந | அடி | நன்மையுண்டாம் |
| நச | அடி | குடிவிட்டுவோட்டும் |
| நரு | அடி | லக்ஷ்மிகடாக்ஷமுண்டு |
| நசா | அடி | வீரலக்ஷ்மிகடாக்ஷமுண்டு |
| நஎ | அடி | கன்றுகாலிமுதலானவையுண்டாம் |
| நஅ | அடி | பிரமராக்ஷதன் குடியிருப்பான் |
| நகூ | அடி | மிகுந்தநன்மையுண்டாகும் |
| ச0 | அடி | யெண்ணேறமும் யெதிரியால் தீதாம |
| சக | அடி | குபேரசம்பத்துண்டாம் |
| சஉ | அடி | அஷ்டலட்சுமிகுடியிருப்பாள் |
| சந | அடி | நன்மைகொடிது |
| சச | அடி | கண்குருடாகும் |

(இ-ள்) மேல்சொல்லிவந்த லக்கத்தின் பலன்போல் ஆகலக்கக் கணக்கி மற்றலக்கங்களின் அடிஅளவுபோல வீடுகட்டினால யெ... ஆம் குறையில்லாமல் வாழ்வார்கள் - எ - று.

## வீடுகளுக்கு தெருவாசக்கால் வைக்கும் லக்கினம்.

ஆவணிமாசம் கட்டும் வீட்டுக்கு கிழக்குபார்த்த வாசப்படி வைக்கலாம், கார்த்திகைமாசம் கட்டும் வீட்டுக்கு தெற்குபார்த்த வாசப்படி வைக்கலாம், மாசிமாதம் கட்டும் வீட்டிற்கு மேற்கு பார்த்த வாசப்படி வைக்கலாம் வைகாசி மாசம் கட்டும் வீட்டிற்கு மேற்குபார்த்த வாசப்படி வைக்கலாம், எந்தமாதங்களில் வாசக்கால்வைத்தாலும் மதிநிலையறிந்து வைக்கவும்.

## கிணறெடுக்கும் இடத்தின் லக்ஷணை இராசிசக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் தெற்கு கல்லுவடக்கு தண்ணீர் | மேஷம் சற்பாறை | ரிஷபம் தண்ணீர் | மிதுனம் கடற்கரை |
| கும்பம் குடலைக்கல்லு | | | கடகம் ஆரோடும் |
| மகரம் இடிக்கரை | | | சிங்கம் சற்பாறை |
| தனுசு வாய்வு மட்டத்திற்கு கிழக்கில் மோழை | விருச்சிகம் பழங்கிணறு தங்கியது | துலாம் புற்றுவரும் | கன்னி தெற்கு வடக்கு மோழை வரும். |

RangaRakes tamilnavarasam.com

உ

கடவுள் துணை.

## அகராதி.


1 குடித்தனம்போக அல்லது மனைகோல ஆகமாத
2 பனிரெண்டு மாதபலன்
3 குடித்தனம் போகும்போது வெள்ளியறிய
4 குடித்தனம் போகதினபொருத்தம்
5 குடித்தனபோக நக்ஷத்திரம்
6 கரிநாள் பார்க்க
7 பூமிசோதிக்கும் நியமம்
8 பிராமணாள் வீடுகட்டும் பூமியின்நியமம்
9 அரசர்கட்டும் நியமம்
10 சூஸ்திரர்கட்டும் நியமம்
11 ஜங்கமர்கட்டு நியமம்
12 சகலஜாதிகளுக்கும் பொதுவிலம்
13 மனைகொல்லக் கணைமுகூர்த்தம்
14 பிரங்கநாளின் பலன்
15 வாஸ்த்துபுருஷன் கிடக்கை
16 வாசல்வைக்கும் விபரம்
17 வாஸ்து யெழுந்திருக்குநாள்
18 வாஸ்த்து க்ர்க்குங் ஜாமம்
19 வாஸ்த்துவின் கெதி
20 நல்லநாள் கொண்டு மனைகொல்ல
21 மேற்கொள் சுபலக்ஷணமறிய
22 மேற்படி மனை குழிகொண்டு பலன்
23 வீடுகட்டுகறது உதவாமரம்
24 குடிபார்க்கும் வீட்டில் ஆகாமரம்
25 வீட்டில் அறைகட்டும் விபரம்
26 வீட்டிற்கு தெருவாசக் கல்வைக்கு லக்கினம்
27 கிணறெடுக்கும்பலனறிய
28 வீடுகட்டவாரபலன்
29 நக்ஷத்திரபலன்
30 நான்குவருணத்தாரும் இருக்குந்திசை


அகராதி முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

பார்க்கஉத்திரம் மகரும்நக்ஷத்திரம்
ஏர்க்கவேபதினான்கும் சுபந்தரும்
தீர்க்கமாய் செற்பனூலிரட்டியே.
மார்க்கமாக மயந்தன்சொன்னதே.

(இ-ள்) உத்திரம் ஆக 14 நக்ஷத்திரத்தில் வீடுகட்ட ஆரம்பஞ் ௬௨
செய்ய உத்தமம்-எ-று.

நான்குவருணத்தாருக்கும் கிரகதிசையறிந்து
வீடுகட்டும் நியமம்.

அந்தணர்தென்றிசை அரசர்மேற்றிசை
வந்திடும்வணிகர்கள் வடக்குவான்றிசை
தொக்கமில்சூத்திரர் தோன்றுங்கீழ்த்திசை
மிந்தியேயடுவது பிரமன்தானமே.

(இ-ள்.) பிராமணன் தெற்கு க்ஷத்திரியருக்கு மேற்கு வணிகருக்கு வடக்கு சூத்திருக்கு கிழக்கு குடியிருப்பாராகில் இலக்ஷிமிவாசம பொருந்தி வாழ்வார்கள் நடுபிரமஸ்தானமாக ௬௩
கொள்க-எ-று,

மனைக்குறி சாஸ்திரம் முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

## விடுகட்டவாரபலன்.

இனியவாம்மெழில் பெருாளு யரும்
தனிசெய்செல்லாதனி லக்கினிபயம்
குணியதிங்களும் கூரிடுகற்சுகம்
துணிவுடன்மயன் சொன்னதமிலலையே.

(இ-ள்) ஞாயறு செவ்வாக் கிழமையில் வீடுகட்ட ஆரம்பித்தால் அக்கினிப் பயம் திங்கட்கிழமையில் ஆரம்பித்தால் நல்ல சுகம்-எ-று. சஉ

உண்மையாம் புதனுடைக்ஜம்வியாழமும்
தன்மையாம் வெள்ளிதாக்கும் சுபாசுபம்
உண்மையாஞ் சனிவாரஞ் சோரபயம்
வன்மைவாரம் வழிந்து மாடங்கட்டே.

(இ-ள்) புதன்கிழமை வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை வீடுகட்ட சுபாசுபம் சனிக்கிழமை கட்டசோரபயம்-எ-று. சஅ

## நக்ஷத்திர பலன்,

ஓதுமஸ்தமுனாயு ரோகணியும்
நீதியாயவிட்டஞ் சதயங்களும்
கோதிலாமிருக சீரிடம்பூசமும்
தீதிலாதிருவோணமும் நன்மையே.

(இ-ள்) அஸ்தம் ரோகணி அவிட்டம் சதயம், மிருகசீரிடம்பூசம் திருவோணம் மிகநன்று-எ-று. ருய

## இதுவுமது,

நன்மையாம் சோதியனுஷட்டாணமும்
துணைமயிலலா துடர்ந்தசித்திரையும்
வன்மைரேவதி வருக்குமுத்திரட்டாதி
பண்ணும்யுத்திராடம் பார்க்கசுபமீதே.

(இ-ள்) சோதி அனுஷம் சித்திரைரேவதி உத்திரட்டாதி உத்திராடம் இவைகள் சுகம்-எ-று.

RangaRakes tamilnavarasam.com